நமது
# ஈழநாடு
www.namathueelanadu.com

குரல் 06 மலர் 67 ஏப்ரல் 2026 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com இணையம்: www.namathueelanadu.com



Simply Scan the QR code
Your Phone Camera

Download the
NamathuEelanadu app


நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் போராட்டமே எமது வாழ்க்கையாகவும் வாழ்க்கையே எமது போராட்டமாகவும் மாறிவிட்டது.

- தமிழீழ தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன்







# உலகின் ஒளியூடங்களில் தோன்றற்கரிய தலைவனின் வீரச் சிரிப்பு!

போர்க்களத்தில் உறுமுகின்ற புலியாக தலைவர் பிரபாகரனைக் கண்ட உலகம், ஒளியூடகங்கள் வழியாக அத் தலைவனின் வீரச் சிரிப்பையும் இராஜதந்திர முகத்தையும் கண்டது. ஒடுக்கப்பட்ட ஈழத் தமிழ் மக்களின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போராடிய ஒப்பற்ற விடுதலை இயக்கத்தின் பெருந்தலைவனைக் காண அன்றொருநாள் கிளிநொச்சி நகரில் ஊடகங்கள் குடிகொண்டன. காவியங்களில் படித்த தலைவரை, களத்தின் வீரக் கதைகளில் கேட்ட தலைவரை காணுகின்ற ஆவல் இல்லாதவர்கள் யார்தான்? உலகில் தலைவர் ஒருவரைக் காண ஊடகங்கள் பெருகிக் குழுமிய நாள் எனில் அன்றுதான்.

### தலைவனைக் காணத் திரண்ட ஊடகங்கள்

ஆம், 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் 10ஆம் தேதி, ஈழத் தமிழர்களின் அரசியல் வரலாற்றில் அதியற்புதமானவொரு நாள் ஆயிற்று. அன்றைய தினம் கிளிநொச்சி, நகரம் ஒரு சாதாரண நகரமாகவன்றி, உலகின் கவனம் திரண்ட அரசியல் மையமாக மாறியது. சிங்கள ஊடகங்கள் முதல் இந்திய மற்றும் சர்வதேச ஊடகங்கள் வரை நூற்றுக்கணக்கான பத்திரிகையாளர்கள் ஒரே இடத்தில் கூடினர். ஒரு தமிழர் தலைவனின் பேச்சை நேரடியாகக் கேட்கக் காத்திருந்தனர்.



தீபச்செல்வன்

இலங்கை வரலாற்றில் ஒரே நிகழ்விற்காக இத்தகைய பரவலான ஊடகச் சேர்க்கை முன்பு நிகழாத ஒன்று. அதை விடவும் மற்றொரு சிறப்பும் இந்த நிகழ்வுக்கு இருக்கிறது. இலங்கையின் ஆட்சியாளர்கள் நடத்திய ஊடகச் சந்திப்புகளிலும்கூட இப்படியாக ஊடகங்கள் திரண்டு கூடியிருக்கவில்லை என்பதை ஶ்ரீலங்கா சிங்கள ஊடகங்களே பதிவு செய்திருந்தும் இங்கு குறிப்பிடாக வேண்டும். எம் தலைவனின் கருத்துக்கள், புகைப்படங்கள் சிங்கள ஊடகங்களை முழுமையாக நிரப்பின. உலகத் தொலைக்காட்சிகளில் தலைவனின் முகம் பிரகாசித்தது.

### வழி திறந்தது...

இச்செய்தியாளர் சந்திப்பு இடம் பெறுவதற்கு முன்பாக வடக்கு மற்றும் தெற்கை இணைக்கும் ஏ9 நெடுஞ்சாலை மிக நீண்ட காலத்தின் பின்னர் திறந்து வைக்கப்பட்ட மற்றொரு நிகழ்வும் இடம்பெற்றது. இது ஒரு போக்குவரத்து வசதி மட்டுமல்லாமல், அரசியல் மற்றும் உளவியல் ரீதியாகவும் முக்கியமான சமிக்ஞையாக அமைந்தது. போரினால் மூடப்பட் இந்த வீதியினால் ஈழ மக்கள் சந்தித்த அவலங்கள் கொஞ்சமல்ல. இந்த திறப்பு, வடக்கில் நடைபெறும் நிகழ்வை உலகளாவிய அளவில் அணுகக்கூடியதாக்கி, தமிழர் அரசியல் உரையாடலை ஒரு திறந்த மேடைக்கு கொண்டு வந்தது.

இதற்கு முன், தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடுகள் பெரும்பாலும் மாவீரர் நாள் உரைகள் மூலமே உலகிற்கு சென்றடைந்தன. ஆனால் இந்த மாநாடு, அந்த ஒரே வழிமுறையை மாற்றி, நேரடி கேள்விபதில் வடிவில் உலக ஊடகங்களுடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்பை உருவாக்கியது. பத்திரிகையாளர்கள் தங்களது சந்தேகங்களை நேரடியாக முன்வைத்து விளக்கம் பெறும் இந்த சந்திப்பு, அரசியல் தொடர்பின் புதிய பரிமாணத்தை உருவாக்கியது.

### அமைதியான குரலில் வெளிப்பட்ட அரசியல்

இந்த மாநாடு நடைபெற்ற காலம், உலக அரசியல் மாற்றங்களால் நிர்ணயிக்கப்பட்டது. குறிப்பாக 2001 செப்டம்பர் 11 தாக்குதலுக்குப் பிறகு, ஆயுதப் போராட்டங்களை உலகம் வேறுபட்ட பார்வையில் அணுகத் தொடங்கியது. அதனை விடுதலைப் புலிகளம் இயக்கம் நன்கு உணர்ந்திருந்தது. அதே சமயம் இலங்கையில் போர் நிறுத்த ஒப்பந்தமும் பேச்சுவார்த்தை சூழலும் உருவாகியிருந்தது. இவ்விரண்டு சூழல்களும் இணைந்து, இந்த ஊடகச் சந்திப்பிற்கு முக்கியத்துவத்தை ஏற்படுத்தியது.

இந்த நிகழ்வில் தலைவர் பிரபாகரனின் பேச்சு நடை மற்றும் பதிலளிக்கும் விதம் உலக ஊடகங்களை மிகவும் ஈர்த்தது. உணர்ச்சி வசப்படாமல், தெளிவான மற்றும் சமநிலையான அணுகுமுறையுடன் தலைவர் அவர்கள் கருத்துகளை பகிர்ந்தார். இதன் மூலம், ஒரு ஆயுதப் போராட்ட இயக்கத் தலைவராக மாத்திரமின்றி ஈழத் தமிழினத்தின் முகவரியாய் பெருந்தலைவனாய் தென்பட்டார்.

பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தாலும் சமாதான முயற்சிகளைத் தொடர்வோம் என்ற அவரது பதில், அந்த நேரத்தில் நிலவிய பதற்றத்தை குறைக்கும் வகையில் இருந்தது. அதேபோல் உள்நாட்டு அரசியல் குறித்து பேசும்போது அவர் எடுத்துக் கொண்ட கவனமான சொல் தேர்வு, முதலிய இராஜதந்திர நுண்ணறிவு உலகைக் கவர்ந்தது.

### தோன்றக்கரியவன்...

பல ஆண்டுகளாக தோன்றக்கரியவனாக இருந்த தலைவரின் தோற்றத்தை உலக ஊடகங்கள் நேரில் கண்டன. உலக ஊடகங்களின் வழியாக உலக மக்கள் கண்டனர். தலைவரின் நேரடி தோற்றமும், எளிமையான அணுகுமுறையும், அவரைப் பற்றிய வியப்புக்களுடன் இருந்தவர்களுக்கு இன்னமும் ஈர்ப்பை ஏற்படுத்தியது. உண்மையில் இது ஒரு செய்தியாளர் மாநாடாக மாத்திரமின்றி ஈழத் தமிழ் இனத்தின் விடுதலைப் பெருங்குரலை இந்த உலகம், ஒளிமுகத்துடன் காணக் கிடைத்த பேறானது. அத்துடன் தமிழர் தேசக் கோரிக்கை உலக அரசியல் உரையாடலின் ஒரு பகுதியாக மாறிய அறிய தருணமுமாகும்.

தலைவர் பிரபாகரன், அன்று சொன்ன சில பதில்கள் இன்றும் சமூக வலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் இளையவர்களால் நம்பிக்கைக்கும் எழுச்சிக்குமான படிமங்களாக, குறியீடுகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு தலைவனின் மொழியைத் தாண்டி, அவரது குரல், அவரது முகம், அவரது தோற்றம் என்பன ஒரு இனத்தின் எழுச்சியாகவும் முகவரியாகவும் போராட்டக் கருவியாகவும் உலகிற்குத் தென்பட்ட இந்தநாள் வரலாற்றில் என்றும் நினைவுக்கும் அற்புதத்திற்கும் உரிய பொன்னாள் ஆகும்.





# திராவிட ஆட்சிக்கு முற்றுப்புள்ளிவைத்து தமிழக முதலமைச்சரானார் ஜோசப் விஜய்

தமிழ் நாட்டின் புதிய முதலமைச்சராக தமிழக வெற்றிக்கழகத்தின் தலைவர் சி ஜோசப் விஜய் அவர்கள் இன்று (10 மே 2026) பதிவியேற்றார். பல்லாண்டு காலமாக தமிழகத்தை ஆக்கிரமித்திருந்த திராவிட ஆட்சியை வெற்றிகொண்டு பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் முன்னிலையில் முதலமைச்சராக பதிவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

நடிகராக தனது பயணத்தை ஆரம்பித்த விஜய் தமிழ் சினிமாவின் மாபெரும் முன்னணி நட்டசத்திரமாக திகழ்ந்துவந்தார். இந்வேளையில் தான் அரசியலில் அடுத்த அடி எடுத்து வைக்க தனது ரசிகர் நற்பணி மன்றத்தை தமிழக வெற்றிக்கழகமாக மாற்றி அதன் தவைராக அரசியலில் நுழைந்த விஜய் நிறைவடைந்த தமிழக சட்டமன்ற பேரவைக்கான தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக களம் கண்டார்.

1967 ஆம் ஆண்டுக்குப்பின்னர் தமிழகத்தை மாற்றி மாற்றி ஆட்சி செய்த இரு பெரும் திராவிட கட்சிகளான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் (அதிமுக) மற்றும் திராவிட முன்னேற்றக் கழகம் (திமுக) ஆகியவற்றிற்கு நடுவே அசைக்கமுடியாத மன உறுதியுடன் பெரும் துணிவு கொண்டு தேர்தலை எதிர்கொண்ட விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக்கழகம் முதல் தேர்தலிலேயே 108 தொகுதிகளில் வெற்றிகொண்டு தமிழகத்தில் பெரும் அரசியில் புரட்சியை செய்தது.

தேர்தல் களம் ஆரம்பித்தது முதல் பல பிரச்சினைகளையும் சவால்களையும் பெரும் எதிர்ப்புக்களையும் சந்தித்த விஜய் தேர்தலில் பெரும் வெற்றி பெற்ற பின்னரும் ஆட்சியை அமைப்பதில் பெரும் சிக்கலையும் நெருக்கடிகளையும் எதிர்கொண்டார்.

108 தொகுதிகளில் வெற்றி கொண்ட தமிழக வெற்றிக்கழகம் ஆட்சியமைக்க தேவையான 118 உறுப்பினர்களின் ஆதரவு என்ற எண்ணிக்கையை எட்டாமையால் தேர்தலில் பிளன்னரான அடுத்த நாட்கள் தமிழக அரசியலின் பெரும் பரபரப்பின் உச்சத்தை தொட்டது.

ஆளுநரை பலமுறை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரிய விஜய் பெரும்பான்மை ஆதரவை நிரூபிக்க கடும் முயற்சிகளில் ஈடுபட்டார். இந்த நிலையில் காங்கிரஸ்இ கம்யூனிஸ்ட் கட்சிகள்இ விசிகஇ இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உள்ளிட்ட கட்சிகளுடன் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. ஆரம்பத்தில் தயக்கம் காட்டிய சில கட்சிகளும் இறுதியில் விஜய்க்கு ஆதரவு அளிக்க முன்வந்ததால்இ தவெக தேவையான எண்ணிக்கையை எட்டியது.

இந்த அரசியல் குழப்ப சூழலில்தான் திமுக அதிமுக இடையே மறைமுக பேச்சுவார்த்தை நடந்ததாக தகவல்கள் பரவின. அதிமுக ஆட்சியமைக்க திமுக வெளியிலிருந்து ஆதரவு தரலாம் என்றும் எடப்பாடி பழனிசாமி முதல்வராகலாம் என்றும் அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டது.

இருப்பினும் "விஜய் ஒருமுறை ஆட்சியில் அமர்ந்துவிட்டால் அடுத்த பல ஆண்டுகள் அவரை அகற்றுவது கடினமாகிவிடும்" என்ற அச்சம் இரண்டு கட்சிகளின் இரண்டாம் கட்ட தலைவர்களிடமும் இருந்ததாக அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

இதற்கிடையில்இ தவெகவுக்கு ஆதரவு அளிப்பதில் விசிக எடுத்த முடிவு மிக முக்கிய திருப்பமாக அமைந்தது. திருமாவளவன் தலைமையிலான விசிக ஆதரவு அளித்ததும் விஜயின் ஆட்சியமைப்புக்கு பெரும் பங்காற்றினர்.



இந்நிலையில் புதிய முதலமைச்சராக பதிவியேற்ற முதலமைச்சர் விஜய் பின்னர் ஆற்றிய உரையில் நான் முதல் உறுதியாக ஒன்று கூறுகின்றேன். எக்காரணம் கொண்டும் நான் மக்களது பணத்தில் கை வைக்க மாட்டேன். அது எனக்கு தேவையற்றது. எனது அரச இயந்திரத்தில் யாரையும் தவறு செய்யவும் அனுமதிக்க மாட்டேன் என தெரிவித்துள்ளார்.

ஊழல் கொலை பெண்களுக்கான பாதுகாப்பின்மை என்ற கடந்த கால ஆட்சிகளின் விரக்தியின் வெளிப்பாடாக புதிய மாற்றத்தை எதிர்பார்த்திருந்த மக்கள் அதற்கான புதிய மீட்பனாக ஜோசப் விஜயை எதிர்பார்த்து அவரை முதலமைச்சர் நாட்காலியில் அமரவைத்து ள்ளனர். அந்த நம்பிக்கைக்கு என்றும் பிரமாணிக்கமாக தனது புதிய அரசை அவர் கட்டியெழுப்புவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நமது ஈழநாடு
www.namathueelanadu.com

குரல் 06 மலர் 67 ஏப்ரல் 2026 மின்னஞ்சல் contact@namathueelanadu.com

# பேரறிவாளனின் புதிய பயணம் விடாமுயற்சியின் அடையாளம்

இந்திய நீதித்துறை வரலாற்றில் ஏ.ஜி. பேரறிவாளன் கடந்து வந்த பாதையானது மிகவும் நீண்டது. அதுமட்டுமன்றி அது பெரும் வலிகளால் நிறைந்திருந்ததோடு கரடுமுரடானதாகவும் இருந்தது.

19 வயதில் சிறைக்குச் சென்று, தனது இளமைக்காலம் முழுவதையும் நான்கு சுவர்களுக்குள்ளேயே கழித்த ஒருவர், 31 ஆண்டுகளுக்குப் பிறகு சட்டப்போராட்டத்தின் மூலம் விடுதலையாகி, தற்போது அதேசட்டத்துறையில் ஒரு சட்டத்தரணியாக தன்னை அடையாளப்படுத்திக் கொண்டிருப்பது காலத்தின் வியக்கத்தக்கவொரு சுழற்சியாகும்.

சிறைவாசம் ஒரு மனிதனை உளவியல் ரீதியாகவும் உடல் ரீதியாகவும் முடக்கிவிடக்கூடும் என்ற பொதுவான பிம்பத்தைத் தகர்த்து, அங்கிருந்தபடியே கல்வி பயின்று, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி சட்டத்தரணிகள் சங்கத்தில் தன்னை வழக்கறிஞராகப் பதிவு செய்திருப்பது பேரறிவாளனின் அபாரமான மனவலிமையையும் தளராத கல்வியார்வத்தையும் காட்டுகிறது.

பெங்களூர் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தில் பயின்று, அகில இந்திய சட்டத்தரணிகள் தேர்வில் அவர் பெற்ற வெற்றி, எத்தகைய இக்கட்டான சூழலிலும் ஒரு மனிதனால் மீண்டு வர முடியும் என்பதற்கான உலகளாவிய முன்னுதாரணமாகுமாக மாறியிருக்கின்றது.

தனக்கு வழங்கப்பட்ட தூக்குத் தண்டனை மற்றும் நீண்டகால சிறைத்தண்டனையை எதிர்த்து அவர் முன்னெடுத்த சட்டப் போராட்டங்களே, சட்டத்துறையில் அவர் ஆழ்ந்த ஈடுபாடு கொள்வதற்குக் காரணமாக அமைந்துள்ளன. ‘தனது சட்டப்பயணம் மனித உரிமைகள் சார்ந்த வழக்குகளில் நலிவுற்ற மக்கள் சார்பாகவும், மரண தண்டனைக்கு எதிராகவும் தொடரும்’ என்று பேரறிவாளன் குறிப்பிட்டுள்ளமை மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

அநீதியை நேரடியாக அனுபவித்த ஒருவரே நீதியின் தேவையையும் அதன் வலிமையையும் மிகவும் ஆழமாக உணர்ந்தவராக இருக்க முடியும். அந்த வகையில், மரண தண்டனைக்கு எதிராக அவர் முன்னெடுக்கப்போகும் சட்டப் போராட்டங்கள், இந்திய நீதித்துறையில் புதிய தத்துவார்த்த விவாதங்களை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

ராஜீவ் காந்தி படுகொலை வழக்கு என்பது இந்தியாவின் அரசியல் மற்றும் சமூக வரலாற்றில் கறைபடிந்த, வேதனையான அத்தியாயமாகும். எனினும், அந்த வழக்கில் நீண்டகாலம் தண்டனை அனுபவித்து, உச்ச நீதிமன்றத்தின் 142ஆவது பிரிவின் கீழ் விடுதலையான ஒருவரின் மறுவாழ்வு என்பது மனிதாபிமான அடிப்படையில் நோக்கப்பட வேண்டியது.

சிறைச்சாலை என்பது மனிதனைத் தண்டிப்பதற்கான இடமாக மட்டும் இருக்காமல், அவரைத் திருத்துவதற்கும், அவர் ஒரு சிறந்த பிரஜையாக சமூகம் திரும்புவதற்குமான இடமாக இருக்க வேண்டும். பேரறிவாளனின் இந்த மாற்றம், சிறை சீர்திருத்தங்கள் மற்றும் கைதியின் கல்வி உரிமையின் அவசியத்தை உலகிற்கு உரக்கச் சொல்கிறது.

சட்டம் என்பது வெறும் தண்டனை வழங்குவதற்கான கருவி மட்டுமல்ல, அது அநீதி இழைக்கப்பட்டவர்களுக்குக் கேடயமாகவும், ஒடுக்கப்பட்டவர்களுக்குக் குரலாகவும் இருக்க வேண்டும் என்பதை பேரறிவாளனின் இந்த புதிய பயணம் மீண்டும் நிரூபிக்கட்டும்.

நீதிக்களத்தில் ஒரு சட்டத்தரணியாக அவர் எடுத்துவைக்கவுள்ள அடுத்த அடி, நீதியின் மாண்பையும், மனித உரிமைகளின் முக்கியத்துவத்தையும் போற்றும் வகையில் அமையட்டும். விளிம்புநிலை மக்களுக்கான வலிமையான குரலாக அவர் சட்டமன்றங்களில் ஒலிப்பார் என்று நாம் எதிர்பார்ப்போம். இப்போதைக்கு அவருக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்.

# நமது ஈழநாடு வாழ்வாதார வன்னி மாவட்ட இணைப்பாளருக்கு வீர வணக்கம்




நமது ஈழநாடு: வாழவாதார உதவித்திட்ட செயற்பாட்டின் வன்னிப்பகுதி இணைப்பாளராக பணியாற்றிய பசுபதி உமாகாந்தன் (சரவணன்) அவர்களுக்கு நமது ஈழநாடு ஊடகத்தின் ஆழ்ந்த வீரவணக்கங்கள்.

நமது ஈழநாடு தொடர்ந்து முன்னெடுத்துவரும் வாழ்வாதார உதவித்திட்டத்தின் வன்னி மாவட்ட இணைப்பாளராக செயலாற்றிய பசுபதி உமாகரன் உதவி தேவைப்படும் குடும்பங்கள் முன்னாள் போராளிகள் மற்றும் மாவீரர் குடும்பங்களை இனங்கண்டு அவர்களுக்கான வாழ்வாதார உதவிகளை பெற்றுக்கொடுப்பதில் சிறப்பாக பணியாற்றினார்.

தன்னலமற்ற அர்ப்பணிப்பு நிறைந்த சேவையினால் நமது ஈழநாட்டின் வாழ்வாதார உதவித்திட்ட பணிக்கு பெரும்பங்காற்றிய பசுபதி உமாகரன் 06.05.2026 அன்று இயற்கை எய்தினார்.

அவரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் நமது ஈழநாட்டு குழுமமும் துயரினை பகிர்ந்துகொள்கின்றோம்.

## மறைந்த காட்டூனிஸ்ட் அஸ்வினின் தீர்க்கதரிசன கருத்தோவிய தொகுப்புகளிலிருந்து





# இந்திய துணை ஜனாதிபதியின் இலங்கை விஜயம் ஒரு பார்வை

***தந்திரீகன்***

இந்திய துணை ஜனாதிபதி சி.பி. இராதாகிருஷ்ணனின் இரண்டு நாள் (ஏப்ரல் 1920) உத்தியோகபூர்வ இலங்கை விஜயமானது, வெறும் சம்பிரதாயபூர்வமான ஒரு அரசமுறைப் பயணமாக அமையாமல், இரு நாடுகளுக்கும் இடையிலான புவிசார் அரசியல், கலாசார மற்றும் மனிதாபிமான உறவுகளை மீள்வரைவு செய்யும் முக்கிய மூலோபாய நகர்வாக அமைந்திருக்கிறது.

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களுக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட இந்த உயர் மட்ட விஜயம், இந்தியாவின் 'அயலகத்திற்கு முதலிடம்' என்ற கொள்கையின் வலுவான நீட்சியாகவும், புதிய நிர்வாகத்துடன் நம்பிக்கையானதொரு பயணத்தைத் தொடங்குவதற்கான வலுவான சமிக்ஞையாகவும் பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகியோருடனான சந்திப்புகளின் போது, இருதரப்பு உறவுகளின் எதிர்காலப்பாதை குறித்து விரிவாக ஆராயப்பட்டது. பொருளாதார மேம்பாடு, கல்வி, சுகாதாரம் மற்றும் முதலீடு ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இணக்கம் காணப்பட்டது.

குறிப்பாக, இலங்கையின் அரச நிர்வாகக் கட்டமைப்பை டிஜிட்டல் மயமாக்குவதிலும் மனிதவள மேம்பாட்டிலும் இந்தியாவின் தொழில்நுட்பப் பாய்ச்சலைப் பகிர்ந்து கொள்ள முன்வந்திருப்பது, ஒரு நவீன இலங்கையை நோக்கிய பயணத்தில் இந்தியா ஒரு மூலோபாயப் பங்காளியாக இருக்க விரும்புவதை உணர்த்துகிறது.

கடந்த காலங்களில் 'தித்வா' சூறாவளி போன்ற இயற்கை அனர்த்தங்களின் போதும், பொருளாதார நெருக்கடி நிலவிய தருணங்களிலும் இந்தியா வழங்கிய எரிபொருள் மற்றும் நிதியுதவிகள் இங்கு நன்றியுடன் நினைவுகூரப்பட்டன. இது இரு நாடுகளுக்கும் இடையிலான 'உற்ற நண்பன்' என்ற பிணைப்பை உலகிற்கு மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்தியது.

இந்த விஜயத்தின் மிக முக்கியமான மனிதாபிமான மைல்கல்லாக, இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு வழங்கப்பட்ட தீர்வுகளைக் குறிப்பிடலாம்.

பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்ற புலம்பெயர் இந்தியர்களின் விசேட நிகழ்வில் உரையாற்றிய துணை ஜனாதிபதி, இந்திய வம்சாவளி மக்களுக்கான குடியுரிமை வழங்கும் திட்டத்தை ஆறாம் தலைமுறை வரை நீட்டிப்பதாக அறிவித்தார். இது மலையக மக்களின் அடையாளச் சிக்கல்களுக்குப் பெரியதொரு வரப்பிரசாதமாகும்.

'ஊட்டி முதல் அட்டன் வரை, மதுரையிலிருந்து மஸ்கெலியா வரை எமது தொப்புள்கொடி உறவு வியாபித்துள்ளது' என்று அவர் உணர்ச்சிபூர்வமாகக் குறிப்பிட்டது, இரு நாட்டு மக்களுக்கும் இடையிலான கலாசார ஒருமைப்பாட்டைப் பிரதிபலித்தது.

மேலும், இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் மூன்றாம் கட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்ட 145 வீடுகளை அவர் கையளித்தார். இதுவரை 50,000 வீடுகள் வழங்கப்பட்டுள்ள நிலையில், எதிர்காலத்தில் மேலும் 10,000 வீடுகள் நிர்மாணிக்கப்படும் என்ற உறுதிமொழி, அம்மக்களின் வாழ்வாதார மேம்பாட்டில் இந்தியாவின் நீண்டகாலப் பங்களிப்பை உறுதிப்படுத்தியது.

இலங்கைத் தீவில் நீண்டகாலமாகத் தொடரும் இனப்பிரச்சினைக்கு நிலையானதொரு அரசியல் தீர்வைப் பெற்றுக் கொள்வதில் இந்தியாவின் வகிபாகம் மிக முக்கியமானது என்பதை இலங்கைத் தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்த விஜயத்தின் போது மீண்டும் வலியுறுத்தின.

ஏப்ரல் 19ஆம் திகதி தமிழ் அரசியல் தலைவர்களைச் சந்தித்த துணை ஜனாதிபதியிடம், வடக்குகிழக்கு மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற புதுடில்லி காத்திரமான அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

குறிப்பாக, 'ஏக்கிய ராஜ்ய' (ஒற்றையாட்சி) என்ற சிங்களச் சொல்லால் வரையறுக்கப்படும் ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்குள் முன்வைக்கப்படும் எந்தவொரு தீர்வும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்காது என்பதில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒருமித்த நிலைப்பாட்டை வெளிப்படுத்தின.

13ஆவது திருத்தச்சட்டம் காலப்போக்கில் ஒரு வெற்று நிர்வாக அமைப்பாக மாற்றப்பட்டுள்ளதையும், மாகாண சபைகளுக்கு உண்மையான அதிகாரப் பகிர்வு வழங்கப்படவில்லை என்பதையும் அவர்கள் ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டினர்.

இதற்குப் பதிலளித்த துணை ஜனாதிபதி, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடனான சந்திப்பின் போது மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துவது குறித்துப் பேசப்பட்டதாகவும், அதற்கான சாதகமான சமிக்ஞையை ஜனாதிபதி வெளிப்படுத்தியதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், தமிழ்த் தலைவர்களிடையே இருக்க வேண்டிய ஒற்றுமையின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய அவர், 'தமிழர்களுக்காகப் பல கட்சிகள் இருக்கலாம், ஆனால் பொதுவான உரிமைகளுக்காக நீங்கள் அனைவரும் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும்' என்று அறிவுறுத்தியது ஒரு முக்கியமான அரசியல் செய்தியாகப் பார்க்கப்படுகிறது.

நுவரெலியா சீதை அம்மன் ஆலயத்தில் அவர் மேற்கொண்ட வழிபாடு, இரு நாடுகளையும் இணைக்கும் இதிகாச காலத்து ஆன்மீகப் பாலத்தை மீண்டும் நினைவூட்டியது. அரசியல் மற்றும் பொருளாதார உறவுகளுக்கு அப்பால், இந்தியாவுக்கும் இலங்கைக்குமான உறவு என்பது ஆழமான கலாசார வேர்களைக் கொண்டது என்பதை இந்த நிகழ்வு உறுதிப்படுத்தியது.

அதேவேளை, மீனவர் பிரச்சினை போன்ற சிக்கலான விவகாரங்களுக்கு இரு தரப்பினரும் இணைந்து ஒரு நிரந்தரத் தீர்வை எட்ட வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தியமை, பிராந்திய அமைதி மற்றும் பாதுகாப்பில் இந்தியாவின் பொறுப்புணர்வைக் காட்டியது.

பொருளாதார ரீதியாக இந்தியா அடைந்து வரும் அபரிமிதமான வளர்ச்சியின் பயன்கள், அதன் அண்டை நாடான இலங்கையையும் சென்றடைய வேண்டும் என்பதில் அவர் காட்டிய உறுதிப்பாடு, 'இணைவோம், வளர்வோம' என்ற தாரக மந்திரத்தைச் செயலாக மாற்றும் முயற்சியாகும்.

இலங்கை வாழ் மக்களின் மகிழ்ச்சியிலும் துயரத்திலும் இந்தியா எப்போதும் உற்ற துணையாக இருக்கும் என்ற அவரது வாக்குறுதி, ஒரு மூத்த சகோதரனின் கடமையாகவே மக்களால் பார்க்கப்படுகிறது.

இந்த விஜயமானது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பன்முகத் தன்மை கொண்ட உறவை மேலும் பலப்படுத்தியுள்ளது. குறிப்பாக, தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் துறைகளில் இந்தியாவின் ஒத்துழைப்பு இலங்கையின் எதிர்கால வளர்ச்சிக்கு ஒரு ஊக்கியாக அமையும். மலையக மக்களின் குடியுரிமை மற்றும் வீடமைப்பு விவகாரங்களில் எட்டப்பட்ட முன்னேற்றங்கள் இந்தியாவின் மனிதாபிமான முகத்தை மீண்டும் பறைசாற்றியுள்ளது.

இந்திய துணை ஜனாதிபதி சி.பி. இராதாகிருஷ்ணனுக்கு 80களில் ஈழப் போராட்டத் தலைவர்களுடன் இருந்த நெருக்கமான உறவு, அவருக்கு இலங்கைத் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை குறித்த ஆழமான பட்டறிவை வழங்கியுள்ளது.

அந்த வகையில், அவருடைய இந்த விஜயம் வெறும் இராஜதந்திர சந்திப்புகளுடன் முடிந்துவிடாமல், சாதாரண மக்களின் உணர்வுகளோடும் கலாசாரத்தோடும் கலந்த ஒரு 'சகோதரத்துவ இராஜதந்திரத்தை' ஆழமாக வேரூன்றச் செய்துள்ளது.

இது தெற்காசிய பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மைக்கும் வளர்ச்சிக்கும் ஒரு புதிய அத்தியாயத்தின் தொடக்கமாக அமையும் என்பதில் ஐயமில்லை என்பதோடு இந்திய எதிர்ப்பு வாதத்தில் திளைத்துவந்த ஆட்சி அதிகாரத்தில் உள்ள ஜே.வி.பியின் முழுமையான மாற்றத்தையும் அம்பலப்படுத்தியுள்ளது.

குறிப்பாக ஜே.வி.பியின் தலைவரான ஜனாதிபதி அநுரகுமாரவின் இந்திய சார்பு போக்கு இந்த விஜயத்தில் மிகத்தெளிவாக புலப்பட்டதோடு கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள 33இந்திய திட்டங்களில் ஆறு திட்டங்களுக்கு அவசரமாக அமைச்சரவை அனுமதி அளித்தமையும் அதற்கான தக்க சான்று பகர்வதாக உள்ளது.

# மீளச் செலுத்தலில் காணாமல்போகும் ‘காசு’

தேசிகன்

இலங்கை தனது வரலாற்றில் கண்டிராத மிக மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து மெல்ல மெல்ல மீண்டு வர முயற்சிக்கும் இந்த இக்கட்டான காலகட்டத்தில், நாட்டின் நிதி நிலைமையை ஆட்டங்காணச் செய்யும் புதியதொரு அச்சுறுத்தல் உருவெடுத்துள்ளது.

பௌதீக ரீதியான யுத்தங்களை விடவும் அபாயகரமான இந்த ‘கண்ணுக்குத் தெரியாத’ இணைய ஊடுருவல் மூலம், நாட்டின் திறைசேரி மற்றும் அரச நிறுவனங்களிலிருந்து பாரிய நிதி கொள்ளையடிக்கப்பட்டிருப்பது தேசிய பாதுகாப்பிற்கும், பொருளாதார ஸ்திரத்தன்மைக்கும் விடுக்கப்பட்ட ஒரு பாரிய சவாலாகும்.

நாட்டின் திறைசேரியிலிருந்து 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்களும், தபால் திணைக்களத்திலிருந்து 6 இலட்சம் அமெரிக்க டொலர்களும் மாயமான நிகழ்வானது, டிஜிட்டல் யுகத்தின் சவால்களை எதிர்கொள்ள இலங்கை எவ்வளவு பலவீனமாக இருக்கிறது என்பதையும், பொறுப்புக்கூற வேண்டிய அதிகாரிகளின் மெத்தனப்போக்கையும் அப்பட்டமாக அம்பலப்படுத்தியுள்ளது.

அவுஸ்திரேலியாவின் ஏற்றுமதி நிதி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தவணைப் பணமான 2.5 மில்லியன் டொலர்கள், ‘வணிக மின்னஞ்சல் சமரசம்’ (டீரளநௌள நுஅயடை ஊழஅரசழஅளைந டீநுஊ) எனும் நுட்பமான முறையில் திருடப்பட்டுள்ளது.

ஹக்கர்கள் அவுஸ்திரேலிய நிறுவனத்தின் உண்மையான மின்னஞ்சல் முகவரியான ‘நஒழசவகயெஉந.பழஎ.யர’ என்பதற்குப் பதிலாக, மிகவும் நெருக்கமான ‘நஒழசவகயெஉந.உழஅ’ என்ற போலியான டொமைனை உருவாக்கி அதிகாரிகளை ஏமாற்றியுள்ளனர்.

இங்கு மிகவும் கண்டிக்கத்தக்க விடயம் என்னவென்றால், மின்னஞ்சல் முகவரியிலும் வங்கிக் கணக்கு விபரங்களிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக இணையப் பாதுகாப்பு நிறுவனமான ‘எனேபில’ (நுயெடிடந), 2025 அக்டோபரிலேயே சம்பந்தப்பட்ட அதிகாரிகளை எச்சரித்துள்ளது.

அத்தகையதொரு எச்சரிக்கை விடுக்கப்பட்ட பின்னரும், அதிகாரிகளுக்கு அந்த மின்னஞ்சல் மாற்றங்களை ஒரு நேரடித் தொலைபேசி அழைப்பு அல்லது காணொளி அழைப்பு மூலம் உறுதிப்படுத்தத் தோன்றவில்லை என்பது அவர்களின் தொழில்நுட்ப அறிவீனத்தையே காட்டுகிறது.

கோடிக்கணக்கான மக்கள் வரிப்பணத்தை ஒரு மின்னஞ்சலை மட்டும் நம்பி அனுப்பியமை அதிகாரிகளின் பொறுப்பற்ற மெத்தனப்போக்கின் உச்சமாகும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ள தகவல்கள் இந்த விவகாரத்தை ஒரு சாதாரண இணையக் குற்றத்திலிருந்து ‘உள்ளகச் சதி’ என்ற சந்தேகத்தை நோக்கி நகர்த்தியுள்ளது.

வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் கணினித் தரவுகள் மற்றும் முக்கியமான மின்னஞ்சல்கள் திட்டமிட்ட முறையில் அழிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.



கணினிகள் அடிக்கடி மாற்றப்பட்டதால் தரவுகள் அழிந்ததாக அதிகாரிகள் கூறும் சாக்குப்போக்குகள் எந்தவொரு தொழில்முறை விசாரணைக்கும் ஏற்புடையதல்ல. 2.5 மில்லியன் டொலர் போன்ற பாரிய நிதிப்பரிமாற்றம் இடம்பெறும் ஒரு திணைக்களத்தில் ‘பேக்கப்’ வசதிகள் கூடவா இல்லை என்ற கேள்வி எழுகின்றது.

இதே போன்றதொரு முயற்சி இந்தியாவுக்குச் செலுத்த வேண்டிய நிதியிலும் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அங்கு அதிகாரிகள் சுதாரித்துக்கொண்டதால் அந்த மோசடி முறியடிக்கப்பட்டது. ஆனால், இலங்கையில் அந்த எச்சரிக்கை உணர்வு இல்லாமல் போனது ஏன் என்பது குறித்து ஆழமான விசாரணை அவசியமாகின்றது.

திறைசேரி மோசடி ஒருபுறமிருக்க, இலங்கை தபால் திணைக்களத்தினால் அமெரிக்க தபால் சேவைக்கு வழங்கப்பட்ட 6 இலட்சம் அமெரிக்க டொலர் கொடுப்பனவிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதுவும் ஒரு திட்டமிட்ட மோசடியா அல்லது தொழில்நுட்பக் கோளாறா என்பது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவை அனைத்தும் ஒரே காலப்பகுதியில் நிகழ்வது, இலங்கையின் நிதி நிர்வாகக் கட்டமைப்பிலுள்ள டிஜிட்டல் பாதுகாப்பை இணையக் குற்றவாளிகள் முழுமையாகக் கையிலெடுத்துள்ளார்களோ என்ற அச்சத்தை ஏற்படுத்துகிறது.

நிதிப் பாதுகாப்பு சீர்குலைந்துவிட்டதாக எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை அரசாங்கம் மறுத்தாலும், இந்த இழப்புகள் பொருளாதார மீட்சியில் இருக்கும் நாட்டிற்குப் பாரிய பின்னடைவு என்பதை மறுக்க முடியாது.

நிதி மறுசீரமைப்பு மற்றும் அரச கடன் முகாமைத்துவச் சட்டத்தின்படி, 2015 முதல் வெளிநாட்டு அரசமுறை கடன் செலுத்தல் பொறுப்பினை நிதியமைச்சு ஏற்றுக்கொண்டுள்ளது.

எனவே, இந்த நிதி இழப்பிற்கான முழுப்பொறுப்பையும் நிதியமைச்சும் அதன் கீழ் உள்ள அதிகாரிகளுமே ஏற்க வேண்டும். ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் உத்தரவின் பேரில் விசாரணைகள் வேகப்படுத்தப்பட்டு, சில சிரேஷ்ட அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தாலும், திருடப்பட்ட நிதியை மீட்பது என்பது உலகளாவிய ரீதியில் கடினமான காரியமாகும்.

இழந்த நிதியை மீட்பதற்கான எவ்வித உத்தரவாதமும் வழங்க முடியாது எனத் திறைசேரி செயலாளர் குறிப்பிட்டிருப்பது, நிதி நிர்வாகத்தில் நிலவும் தொழில்நுட்பப் பலவீனத்தை மறைமுகமாகச் சுட்டிக்காட்டுகிறது.

இந்தச் சம்பவங்கள் இலங்கைக்கு மிகக் கசப்பான பாடங்களாகும். டிஜிட்டல் யுகத்தில் ஒரு நாட்டின் உயர் அதிகாரிகள் கூட எவ்வளவு எளிதாக ஏமாற்றப்பட முடியும் என்பதை இது நிரூபித்துள்ளது. இனிவரும் காலங்களில் இத்தகைய தவறுகள் நிகழாமல் இருக்க பின்வரும் நடைமுறைகள் கட்டாயமாக்கப்பட வேண்டும்:

1.இருமுறை உறுதிப்படுத்தல் (2குயு): எந்தவொரு நிதிசார் கோரிக்கையையும் அல்லது வங்கிக் கணக்கு மாற்றத்தையும் மின்னஞ்சல் மூலம் உறுதிப்படுத்தாமல், நேரடித் தொடர்பு மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

2.தொழில்நுட்ப முதலீடு: அரச நிறுவனங்கள் தங்களின் டிஜிட்டல் கட்டமைப்புகளைப் பாதுகாக்க நவீன ‘பயர்வோல்’ (குசைநறயடட) மற்றும் மேம்பட்ட பாதுகாப்பு மென்பொருட்களைப் பயன்படுத்த வேண்டும்.

3.தேசிய சைபர் பாதுகாப்புச் சட்டம்: இந்தச் சட்டத்தை விரைவாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் இணையக் குற்றங்களுக்கு எதிராகக் கடுமையான தண்டனைகளை உறுதி செய்ய வேண்டும்.

4.அதிகாரிகளுக்கான பயிற்சி: டிஜிட்டல் யுகத்தின் நுணுக்கங்கள் மற்றும் ஹக்கர்களின் யுக்திகள் குறித்து அதிகாரிகளுக்குத் தொடர்ச்சியான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

இவை ஆகக்குறைந்த அடிப்படைகளாக இருந்தலும் இதற்கும் அப்பாற்பட்ட மேம்பட்ட நவீன தொழில்நுட்ப பாதுகாப்பும் உறுதிப்படுத்தல்களம் தற்போது அவசியமாகின்றது.

இலங்கையின் நிதிப் பாதுகாப்பு என்பது இப்போது நாட்டின் தேசிய பாதுகாப்பின் ஒரு அங்கமாக மாறியுள்ளது. டிஜிட்டல் திரைக்குப் பின்னால் ஒளிந்திருக்கும் எதிரி, துப்பாக்கிகளை விடவும் கூர்மையான தொழில்நுட்ப அறிவைக் கொண்டு இலங்கையின் கஜானாவைத் துளைத்துக் கொண்டிருக்கிறான்.

இந்த மோசடிகளுக்குக் காரணமான அதிகாரிகள் தராதரம் பார்க்காமல் தண்டிக்கப்பட வேண்டும். வெறும் பொலிஸ் விசாரணைகளுடன் இது நின்றுவிடக்கூடாது. இழந்த நிதியை மீட்பதற்கான சர்வதேச அழுத்தங்களை அரசாங்கம் காத்திரமாக முன்னெடுக்க வேண்டும்.

விழிப்புணர்வையும் எச்சரிக்கை உணர்வையும் கவசமாக அணியத் தவறினால், இலங்கை தனது பொருளாதார இறையாண்மையை டிஜிட்டல் ஊடுருவல்களிடம் முற்றாக இழக்க வேண்டிய நிலை ஏற்படும்.

கண்ணுக்குத் தெரியாத எதிரியை வீழ்த்தத் தேவையான தொழில்நுட்ப அறிவும் எச்சரிக்கை உணர்வும் மட்டுமே இலங்கையின் அடுத்து வரவுள்ள பெரும் நெருக்கடியைத் தடுக்கும் கவசமாக அமையும்.

தற்போதைக்கு அவுஸ்திரேலியாவின் முழுமையான ஒத்துழைப்பு பெறப்படுவதாக இருதரப்பிலும் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் அதன் வெற்றி இழந்த நிதியை மீளப் பெறுவதில் தான் தங்கியிருக்கின்றது.

அதேபோன்று தான் அமெரிக்காவின் ஒத்துழைப்புக்கள் கிடைத்தாலும் இழக்கப்பட்ட நிதியை மீளப்பெறுவதில் தான் அந்த முயற்சியின் வெற்றியும் தங்கியுள்ளது.

எவ்வாறாக இருந்தாலும், தற்போதைய நிலையில், சிறுகச்சிறுகச் சேமித்து ஒட்டுமொத்தமாக இழந்த நிலைமை தான் இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது. இதிலிருந்து மீள்வது மற்றொரு சவாலை ஏற்படுத்தியிருக்கின்றது.

# தீபச்செல்வனின் புத்தகங்கள் தடுப்பு
# எழுத்துச் சுதந்திரத்தை ஒடுக்கும் ஸ்ரீலங்கா
# கண்டுகொள்ளுமா பன்னாட்டுச் சமூகம்




## கேள்வி எழும்பும் தமிழ் தேசிய ஆய்வு அமையம்

ஈழத்து எழுத்தாளர் தீபச்செல்வனின் புத்தகங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை, ஸ்ரீலங்கா அரசின் எழுத்துச் சுதந்திரத்தை ஒடுக்கும் கொடுஞ் செயல் என்று சுட்டிக்காட்டியுள்ள தமிழ் தேசிய ஆய்வு அமையம், இது குறித்து பன்னாட்டுச் சமூகம் கரிசனையை இனியேனும் செலுத்துமா என்றும் கேள்வி எழுப்பியுள்ளது. தீபச்செல்வனின் 360 நூல்களை ஸ்ரீலங்கா அரசு தடுத்து வைத்துள்ளமை தென்னிலங்கையில் பாரிய பேசுபொருள் ஆகியுள்ள நிலையில் இது குறித்து நமது ஈழநாடு பத்திரிகையின் தமிழ் தேசிய ஆய்வு அமையம் வெளியிட்டுள்ள விரிவான அறிக்கை வருமாறு:

### தமிழருக்கு மறுக்கப்படும் எழுத்துச் சுதந்திரம்

“இலங்கையில் எழுத்துச் சுதந்திரம் என்பது ஈழத் தமிழ் மக்களுக்கு தொடர்ந்தும் மறுக்கப்பட்டு வந்துள்ளதுடன் பல கசப்பான அனுபவங்களையும் வரலாறு தந்துள்ளது. இந்த நிலையில் ஆட்சி மாற்றத்தின் பின்னரும் ஈழத் தமிழ் எழுத்தாளர்களின் குரல் பல்வேறு கட்டுப்பாடுகளுக்கும் சந்தேகங்களுக்கும் உள்ளாகி வந்திருக்கிறது. சமீபத்தில் எழுத்தாளர் தீபச்செல்வனின் நூல்கள் இலங்கை சுங்கத்துறையால் தடுக்கப்பட்ட சம்பவம், இந்த பிரச்சினையை மீண்டும் தீவிரமாக வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளது.

2026ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இந்தியாவில் அச்சிடப்பட்ட தீபச்செல்வனின் ஐந்து நூல்களின் சுமார் 350 பிரதிகள் இலங்கை சுங்கத்துறையால் தடுத்து வைக்கப்பட்டன. அதிகாரிகள் அவற்றின் உள்ளடக்கம் “தேசிய ஒற்றுமைக்கு அச்சுறுத்தலாக இருக்கலாம்” என்ற காரணத்தை முன்வைத்தனர். ஆனால் எந்தச் சட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது தெளிவாக குறிப்பிடப்படவில்லை . இந்தத் தெளிவின்மைதான் கருத்துச் சுதந்திரம் குறித்த கேள்விகளை அதிகரித்தது.

### சுதந்திர ஊடக இயக்கம் கண்டிப்பு

இச்சம்பவம் தனிப்பட்ட ஒன்றல்ல. இதற்கு முன்பும் தீபச்செல்வனின் நூல்கள் இதேபோன்ற காரணங்களால் தடுக்கப்பட்டுள்ளன. 2017ஆம் ஆண்டிலும் அவரது ‘தமிழர் பூமி’ என்ற நூல் சுங்கத்துறையால் பறிமுதல் செய்யப்பட்டு பின்னர் ஆய்வுக்குப் பிறகு விடுவிக்கப்பட்டது.

இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெறுவது, குறிப்பாக தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகள் அதிகமாக கண்காணிக்கப்படுகின்றனவா என்ற சந்தேகத்தை எழுப்புகிறது.



இந்தச் சம்பவத்திற்குப் பின்னர் பல எழுத்தாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் அமைப்புகள் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டனர். சுதந்திர ஊடக இயக்கம் இதனை கருத்துச் சுதந்திரத்தை மீறும் முயற்சியாகக் கண்டித்து, எழுத்தாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என வலியுறுத்தியது . மேலும், “ஒரு நூலின் உள்ளடக்கம் ஆபத்தானதா என்பதை பாதுகாப்பு அமைப்புகள் தீர்மானிப்பது மனித உரிமை மீறல்” எனவும் விமர்சிக்கப்பட்டது .

### எழுதுவது குற்றமா?

இதன் மையத்தில் உள்ள முக்கியமான கேள்வி – யார் ஒரு நூலின் உண்மையை நிர்ணயிக்கிறார்கள்? ஒரு எழுத்தாளர் தனது சமூகத்தின் அனுபவங்களை, குறிப்பாக போர், இனஅழிப்பு, இடம்பெயர்வு போன்ற வலிகளை பதிவு செய்வது குற்றமா? அல்லது அது ஒரு சமூகத்தின் நினைவுகளை பாதுகாக்கும் உரிமையா? தீபச்செல்வன் போன்ற எழுத்தாளர்கள் தங்கள் அனுபவங்களை பதிவு செய்வது துஇ வரலாற்றை மறக்காமல் இருக்க வேண்டிய ஒரு முயற்சியாகப் பார்க்கப்படுகிறது.

இலங்கையின் போர் பின்னணியில்இ தமிழ் சமூகத்தின் குரல் நீண்ட காலமாக ஒடுக்கப்பட்டதாக பலரும் கருதுகின்றனர். இந்த நிலையில், தமிழ் இலக்கியம் என்பது வெறும் கலை அல்ல; அது சாட்சியமும் எதிர்ப்பும் ஆகும். இதனால், அந்த இலக்கியங்கள் அரசியல் பார்வையில் சந்தேகத்திற்குரியவையாகக் கருதப்படுவது இயல்பானதாக மாற்றப்பட்டுள்ளது. ஆனால் இது ஒரு ஜனநாயக நாட்டிற்கு ஏற்ற நிலைமையா என்பது கேள்விக்குறியாகிறது.

### சுயதணிக்கைக்கான அழுத்தமா?

மேலும், இந்தச் சம்பவம் நிர்வாகத் தெளிவின்மையையும் வெளிப்படுத்துகிறது. வெவ்வேறு அமைச்சகங்களும் அதிகாரிகளும் மாறுபட்ட விளக்கங்களை வழங்கியுள்ளன.

இது சட்ட நடைமுறைகள் ஒருங்கிணைந்ததாக இல்லை என்பதையும், தீர்மானங்கள் ஒருசிலரின் கருத்துக்களால் பாதிக்கப்படலாம் என்பதையும் காட்டுகிறது.

இப்படிப்பட்ட சூழல் எழுத்தாளர்களிடையே “தன்னிச்சையான தடை” – சுயதணிக்கைக்கான அழுத்தம் என்ற மனநிலையை உருவாக்கும் அபாயம் உள்ளது.

எழுத்துச் சுதந்திரம் என்பது வெறும் ஒரு எழுத்தாளரின் உரிமை மட்டுமல்ல; அது ஒரு சமூகத்தின் சிந்தனைச் சுதந்திரத்தின் அடிப்படை. ஒரு புத்தகத்தை தடுப்பது என்பது ஒரு சிந்தனையை தடுக்க முயல்வதற்குச் சமம். குறிப்பாக சிறுபான்மையின மக்களின் குரல் தடுக்கப்படும்போது, இலங்கையில் இன்னமும் எப்படி இனவொடுக்கு முறை நீள்கிறது என்பதை நாம் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

### எரிக்கப்பட்ட யாழ் நூலகம்

இலங்கையில் கருத்துச் சுதந்திரம் பல காலங்களாக சவால்களை எதிர்கொண்டுள்ளது. 1981ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பொது நூலகம் எரிப்பு சம்பவம் அதில் மிக முக்கியமானதாகும்.

ஆயிரக்கணக்கான அரிய தமிழ் நூல்கள், கையெழுத்து பிரதிகள் வரலாற்றுச் சான்றுகள் அனைத்தும் அழிக்கப்பட்டது. இது ஒரு கலாச்சார நினைவகத்தை அழிக்கும் செயல் மட்டுமல்ல தமிழ் மக்களின் அறிவு மற்றும் வரலாற்று அடையாளத்தை அழிக்க முயன்றதாகப் பார்க்கப்படுகிறது.

இதன் பின்னர், 2009இல் நடந்த முள்ளிவாய்க்கால் இறுதிக்கட்டப் போர் காலத்தில், போர் தொடர்பான செய்தி வெளியீடுகள் கடுமையாக கட்டுப்படுத்தப்பட்டன. ஊடகங்கள் சுயாதீனமாகச் செயல்பட முடியாத சூழல் நிலவியது; பல உண்மைகள் வெளியுலகிற்கு தாமதமாகவே தெரிய வந்தன.

அதேபோல், போர் பின்னர் காலத்திலும் ஊடக சுதந்திரம் பாதிக்கப்பட்டுள்ளது. 2010ஆம் ஆண்டு பத்திரிகையாளர் லசந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்பட்ட சம்பவம், விமர்சன குரல்களுக்கு எதிரான அச்சுறுத்தலாகக் கருதப்பட்டது. அவர் தலைமையிலான பத்திரிகை அரசை விமர்சித்ததற்காகவே குறிவைக்கப்பட்டது என்ற குற்றச்சாட்டுகள் எழுந்தன.

மேலும் பிரகீத் எக்னெலிகொட 2010இல் காணாமல் போனதும் கருத்துச் சுதந்திர மீறலின் இன்னொரு எடுத்துக்காட்டாகும். இத்தகைய சம்பவங்கள் எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்தும் போது உயிர் பாதுகாப்பே கேள்விக்குறியாக இருந்த காலத்தை வெளிப்படுத்துகின்றன.

நிறைவாக, தீபச்செல்வனின் நூல்கள் தடுக்கப்பட்டமை ஒரு தனிப்பட்ட சம்பவமாக மட்டும் பார்க்கப்படக்கூடாது. அது ஸ்ரீலங்கா அரசால் கருத்துச் சுதந்திரம் எவ்வளவு மீறப்படுகிறது என்பதை பன்னாட்டுக்கு எடுத்துரைக்கிறது. ஒரு ஜனநாயக நாட்டில் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் அவற்றை வெளிப்படுத்தும் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்பது உலகளாவிய கொள்கை.

இல்லையெனில், இலக்கியமும் வரலாறும் இரண்டும் மௌனமாக்கப்படும் அபாயம் உள்ளது. எனவே பன்னாட்டுச் சமூகம் உடன் தலையிட்டு ஈழத் தமிழ் எழுத்தாளர்களின் எழுத்துச் சுதந்திரத்தை பாதுகாப்பதுடன் அவர்களின் உயிரையும் கொடிய ஸ்ரீலங்கா அரசிடமிருந்து காதுகாக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்...” என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பீரிஸின் திடீர் ஞானம்

## 'நல்லெண்ணப் போர்வைக்குள் ஒளிந்திருக்கும் சந்தர்ப்பவாத அரசியல்'

தாயகன்

இலங்கை அரசியலில் 'கல்விமான்' என்றும் 'அரசியலமைப்பு நிபுணர்' என்றும் வர்ணிக்கப்படும் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், 26042026 அன்று யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வாவின் நினைவுப் பேருரையை ஆற்றிய விதம், தமிழ் அரசியல் தளத்தில் மத்தியில் பெரும் வியப்பையும் அதைவிட மேலாகக் கடுமையான விமர்சனங்களையும் தோற்றுவித்துள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரின் கடும்போக்கு அரசாங்கங்களில் வெளிவிவகார அமைச்சராக இருந்து, சர்வதேச அரங்கில் இலங்கையின் போர்க்குற்றச்சாட்டுகளையும் மனித உரிமை மீறல்களையும் நியாயப்படுத்திய ஒருவருக்கு, இப்போது 'சமஷ்டி' பற்றியும் '13 ஆவது திருத்தம்' பற்றியும் ஏற்பட்டிருக்கும் இந்தத் திடீர் ஞானம், வெறும் அரசியல் சந்தர்ப்பவாதமே அன்றி வேறில்லை.

தந்தை செல்வா நினைவுப் பேருரையில் பீரிஸ் ஆற்றிய உரை, வரலாற்று உண்மைகளைத் தனது தற்போதைய அரசியல் நிலைகளுக்கேற்ப வளைப்பதிலும், தனது கடந்தகால அரசியல் சறுக்கல்களை மூடிமறைப்பதிலும் அதிக கவனம் செலுத்தியிருந்தது.

1995 முதல் 2000 ஆம் ஆண்டு வரை சந்திரிக்கா அரசாங்கத்தில் நீதி மற்றும் அரசியலமைப்பு விவகார அமைச்சராக இருந்து அவர் தயாரித்த 'சமஷ்டி' சாயல் கொண்ட தீர்வுத் திட்டங்கள், இன்று அவரால் பெரும் சாதனைகளாகச் சிலாகிக்கப்படுகின்றன.

ஆனால், அதே பீரிஸ் தான் பின்னர் மஹிந்த ராஜபக்ஷவின் முகாம் பக்கம் கட்சிதாவி, 13ஆவது திருத்தச்சட்டத்தைக்கூட முழுமையாக நடைமுறைப்படுத்த மறுத்த கடும்போக்குச் சிந்தனைகளுக்கு இராஜதந்திர முலாம் பூசியவர் என்பதை தமிழ் மக்கள் மறக்கவில்லை.

ஜி.எல். பீரிஸ் தனது உரையில், சமஷ்டி என்பது பிரிவினை அல்ல என்றும், அது ஆரம்பத்தில் தமிழர்களை விட கண்டிச் சிங்களவர்களாலேயே கோரப்பட்டது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். வரலாற்று ரீதியாக இது உண்மையாக இருக்கலாம்.

ஆனால், கடந்த தசாப்தங்களில் 'சமஷ்டி' என்ற சொல்லைக் கேட்டாலே அதுநாட்டைப் பிரிக்கும் சூழ்ச்சி என்று தென்னிலங்கை மக்களுக்குப் பாடம் புகட்டிய அரசியல் முகாம்களில் பீரிஸ் ஒரு முக்கிய தூணாக இருந்துள்ளார்.

குறிப்பாக, 2002 ஆம் ஆண்டு நோர்வேயின் மத்தியஸ்தத்தில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அரசாங்கத் தரப்புத் தூதுக்குழுவின் தலைவராக இருந்த பீரிஸ் 'தனிநாட்டுக்காக போராடிய' தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஒஸ்லோ பிரகடனத்தில் 'சமஷ்டி' அடிப்படையில் தீர்வை ஆராய இணக்கம் தெரிவித்தார்.

ஆனால், பின்னர் அந்த இணக்கப்பாட்டிலிருந்து நழுவி, அதைக் குழிதோண்டிப் புதைத்த அரசியல் நகர்வுகளுக்கு அவரே கருவியாகப் பயன்படுத்தப்பட்டார் என்பதை மறந்துவிடலாகாது.

அன்ரன் பாலசிங்கத்துடனான தனது நெருக்கத்தைப் பற்றிப் பேசும் பீரிஸ், பிரபாகரன் காரண காரியங்களை ஏற்க மறுத்ததாகவும், அதனால் தான் தீர்வு எட்டப்படவில்லை என்றும் பழிபோடுகிறார். ஆனால், உண்மையில் தென்னிலங்கை அரசியலில் நிலவிய அதிகாரப் போட்டியும், பீரிஸ் போன்றவர்கள் தமது பதவிகளைத் தக்கவைக்க மேற்கொண்ட கட்சித்தாவல்களுமே பல தீர்வுகளைக் கலைத்தன.

நீலன் திருச்செல்வத்தின் கொடூரப் படுகொலை குறித்து இன்று கவலை வெளியிடும் பீரிஸ், நீலன் திருச்செல்வன் போன்ற மிதவாதிகள் முன்வைத்த நியாயமான அதிகாரப்பகிர்வு கோரிக்கைகளைச் சிங்களப் பேரினவாத சக்திகள் 'துரோகம்' என்று முத்திரை குத்தியபோது, அதற்கெதிராகக் குரல் கொடுக்காமல் மௌனம் காத்தவர்.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில், 13 ஆவது திருத்தச்சட்டத்திற்கு அப்பால் சென்று அதிகாரப் பகிர்வு (13பிளஸ்) வழங்கப்படும் என்று இந்தியாவுக்கு வழங்கப்பட்ட போலி வாக்குறுதிகளுக்குப் பின்னால் பீரிஸின் மூளையே செயற்பட்டது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களைத் தோற்கடிக்கவும், போர்க்கால மீறல்களை 'மனிதாபிமான நடவடிக்கை' என்று உலகை நம்ப வைக்கவும் அவர் கையாண்ட இராஜதந்திர யுக்திகள் அனைத்தும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைச் சிதைக்கும் நோக்கம் கொண்டவையே தான்.

ராஜபக்ஷக்களின் மூன்றாவது வருகைக்கான உருவாக்கப்பட்ட 'வியத்மக' அமைப்பின் கொள்கை வகுப்பாளராக இருந்து கொண்டு, அன்று அதிகாரப்பகிர்வை எதிர்த்தவர் இன்று யாழ்ப்பாணத்தில் வந்து மாகாண சபைக்காகக் குரல் கொடுப்பது வேடிக்கையானது.

இப்போது, தென்னிலங்கையில் அரசியல் களம் மாறியுள்ள நிலையில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று விமர்சிப்பதும், மாகாண சபைத் தேர்தலுக்காகத் தமிழ்க் கட்சிகளுடன் கைகோர்ப்பதும் பீரிஸின் புதிய நாடகமாகும்.

சுமந்திரனின் இல்லத்தில் அமர்ந்து கொண்டு மாகாண சபைகளை இயங்கச் செய்ய வேண்டும் என்று அவர் பேசுவது, 'வெள்ளம் வரும் முன் அணை போடும்' தந்திரமாகும். தென்னிலங்கையில் தனது அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ளவும், தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராக ஒரு பலமான கூட்டணியை உருவாக்கவும் அவர் தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஒரு பகடைக்காயாகப் பயன்படுத்துகிறார்.

சமஷ்டி என்பது ஒரு பரந்துபட்ட அரசியல் தத்துவம் என்று இன்று பாடம் எடுக்கும் பேராசிரியர், தனது அதிகார பலத்தின் உச்சத்தில் இருந்த போது ஏன் அதனை நடைமுறைப்படுத்த அழுத்தம் கொடுக்கவில்லை? 2000 ஆம் ஆண்டு அவர் சமர்ப்பித்த அரசியலமைப்பு வரைவை ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்றத்தில் எரிக்க முயன்றபோது, அதற்கு முகம் கொடுக்க முடியாமல் அரசாங்கம் பின்வாங்கியது. அப்போதே பீரிஸ் தனது கொள்கையில் உறுதியாக இருந்திருந்தால், அவர் பதவி விலகியிருக்க வேண்டும். ஆனால், அவர் கொள்கையை விடத்தனது பதவியையே மேலாகக் கருதினார்.

பீரிஸின் திடீர் கொள்கை மாற்றம், 'ஆடு நனையுதே என்று ஓநாய் அழுத' கதைக்கு ஒப்பானது. யாழ்ப்பாணத்து மண்ணில் நின்று கொண்டு தந்தை செல்வாவைப் புகழ்வதும், சமஷ்டியின் அவசியத்தைப் பேசுவதும் தமிழ் மக்களின் அனுதாபத்தைப் பெறுவதற்கான தற்காலிக உத்தி மட்டுமே.

கடந்த காலங்களில் பேரினவாத அரசியலுக்குப் பக்கபலமாக இருந்து கொண்டு, சர்வதேச விசாரணைகளைத் தடுக்கப் பாடுபட்டுவிட்டு, இப்போது மிதவாதப் போர்வை போர்த்திக் கொள்வது புத்திஜீவிக்கு அழகல்ல. தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற உண்மையான நோக்கம் அவருக்கு இருக்குமானால், அன்று மஹிந்தவின் அமைச்சரவையில் இருந்தபோதே அதைச் செய்திருக்க முடியும்.

இலங்கைத் தமிழர்களின் இனப் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதில் பீரிஸ{க்கு உண்மையான அக்கறை இருக்குமானால், அவர் முதலில் தனது கடந்தகால அரசியல் தவறுகளுக்குப் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும்.

தென்னிலங்கை மக்களிடம் சென்று, 'நாம் இவ்வளவு காலம் சமஷ்டியைப் பற்றிச் சொன்னவை பொய், அதுதான் இந்த நாட்டுக்குப் பொருத்தமான தீர்வு' என்று தைரியமாகப் பிரசாரம் செய்ய வேண்டும். ஆனால் அதற்கு அவர் தயாராகவில்லை.

பீரிஸ{க்கு ஏற்பட்டிருக்கும் இந்தத் 'திடீர் ஞானம்' இதயசுத்தியுடன் கூடிய ஒன்றல்ல, அது அடுத்த தேர்தல் களத்திற்கான தயார்படுத்தல் மட்டுமே என்பதைத் தமிழ் அரசியல் பரப்பும், தென்னிலங்கை மக்களும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஒரு காலத்தில் ஒற்றையாட்சியின் காவலராக நின்றவர், இன்று சமஷ்டியின் வழக்கறிஞராக மாறியிருப்பது அவரது தனிப்பட்ட பதவி அதிகாரத்தின் மீதான அவரது தீராத தாகத்தையே காட்டுகிறது, அவ்வளவு தான்.

நமது ஈழநாடு
www.namathueelanadu.com



# எதேச்சாதிகாரத்தின் வீழ்ச்சி



**பூலோகன்**

நவீன கால அரசியல் வரலாற்றில் 'எதேச்சாதிகாரம்' என்பது ஒரு புதிய மற்றும் நுணுக்கமான வடிவத்தைப் பெற்றுள்ளது. பழைய கால சர்வாதிகாரிகள் இராணுவ பலத்தால் ஆட்சியைப் பிடித்தார்கள் என்றால், நவீன எதேச்சாதிகாரிகள் ஜனநாயக வழியில், மக்களின் வாக்குகள் மூலமே ஆட்சிக்கு வருகிறார்கள்.

ஆனால், ஆட்சிக்கு வந்தவுடன் அந்த ஜனநாயகத்தையே உள்ளிருந்து சிதைத்து, அதிகாரத்தைத் தனிநபரின் கைகளில் குவிக்கிறார்கள். இதற்கு மிகச் சிறந்த உதாரணமாகத் திகழ்ந்தவர் ஹங்கேரியின் விக்டர் ஓர்பான்.

கடந்த 16 ஆண்டுகளாக அந்நாட்டை ஒரு தனிநபரின் விருப்பத்திற்கேற்ப வளைத்து ஆட்சி செய்தார். அண்மைய தேர்தல் முடிவுகள் அசைக்க முடியாதவர் என்று கருதப்பட்ட ஓர்பானின் பிம்பத்தைச் சுக்குநூறாகத் தகர்த்துள்ளன. இது உலகெங்கிலும் உள்ள எதேச்சாதிகாரிகளுக்கும், ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்டவர்களுக்கும் மிக முக்கியமான படிப்பினையாகும்.

விக்டர் ஓர்பான் வெறும் ஆட்சியாளராக மட்டும் இருக்கவில்லை. அவர் அரசாங்கம் என்பதையே தனக்குச் சாதகமான முறையில் மீளமைக்க முனைந்தார். அவர் கையாண்ட முறையை அரசியல் ஆய்வாளர்கள் 'நிர்வாக எதேச்சாதிகாரம்' என்று அழைக்கிறார்கள்.

ஆட்சிக்கு வந்தவுடன் அவர் செய்த முதல் காரியம் அரசியல் யாப்பைத் திருத்தி எழுதியதுதான். இதன் மூலம் தேர்தல் விதிகளைத் தனது கட்சிக்குச் சாதகமாக மாற்றினார்.

நீதித்துறையில் இருந்த சுதந்திரமான நீதிபதிகளை அப்புறப்படுத்திவிட்டு, அந்த இடங்களைத் தனது விசுவாசிகளால் நிரப்பினார். இதன் விளைவாக, அரசாங்கத்தின் தவறுகளைக் கேள்வி கேட்கும் நீதித்துறை அதிகாரம் முடக்கப்பட்டது.

அடுத்ததாக, அவர் ஊடகங்களின் மீது தனது பிடியைச் செலுத்தினார். ஹங்கேரியின் தேசிய ஊடகங்கள் அனைத்தும் அவரது கட்சியின் ஊதுகுழல்களாக மாற்றப்பட்டன. சுயாதீன ஊடகங்கள் விளம்பரங்கள் மறுக்கப்பட்டும், சட்ட நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்பட்டும் முடக்கப்பட்டன.

டொனால்ட் ட்ரம்பின் மகா இயக்கத்தினர் உட்பட உலகெங்கிலும் உள்ள வலதுசாரித் தலைவர்கள் இவரை ஒரு 'ஆதர்ச நாயகனாக' நோக்கி வந்தனர். லிபரல் ஜனநாயகத்தை அதன் ஆன்மாவிலிருந்து பிரித்து, வெற்றுக் கூடாக மாற்றிய போதிலும், மக்கள் ஆதரவு எனும் கவசத்தால் ஓர்பான் பாதுகாக்கப்பட்டார்.

ஆனால், ஹங்கேரிய மக்கள் அண்மையில் வழங்கிய தீர்ப்பு, எந்தவொரு மாயையும் காலாவதித் திகதியைக் கொண்டது என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

ஓர்பானின் வீழ்ச்சியில் மிகவும் சுவாரஸ்யமான அம்சம் யாதெனில், அவரை வீழ்த்தியவர் ஒரு காலத்தில் அவரது நெருங்கிய வட்டத்திற்குள் இருந்த விசுவாசியான பீற்றர் மக்யார் ஆவார்.

ஓர்பானின் நிர்வாக முறைமைக்குள் இருந்து கொண்டு அதன் ஊழல்களையும், ஜனநாயகச் சிதைவுகளையும் நேரடியாகக் கண்டவர் மக்யார். அவர் உருவாக்கிய 'திஸ்ஸா' கட்சி, சிதறிக்கிடந்த எதிர்க்கட்சிகளை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்தது.

ஒரு எதேச்சாதிகாரியை வீழ்த்த வேண்டுமானால், வெறும் விமர்சனங்கள் மட்டும் போதாது, அந்த அதிகார மையத்திற்கு இணையான அல்லது அதைவிட வலிமையான மாற்றாகத் திகழ வேண்டும் என்பதை மக்யார் நிரூபித்துள்ளார்.

ஓர்பானின் வீழ்ச்சி புகட்டும் முதல் பாடம், வெறும் கலாசார யுத்தங்களால் மக்களின் பசியைத் தீர்க்க முடியாது என்பதாகும்.

ஓர்பான் கையாண்ட தந்திரோபாயம் மிகவும் எளிமையானது சிறுபான்மையினரை அச்சுறுத்தலாகச் சித்தரிப்பதும், மத அடையாளத்தை அரசியல் கேடயமாகப் பயன்படுத்துவதும் ஆகும்.

ஐரோப்பிய ஒன்றியம் அவரது ஊழலை விமர்சித்தபோது, அதனைத் தான் ஒரு கிறிஸ்தவர் என்பதால் வரும் தாக்குதலாகச் சித்தரித்து, 'புனித யுத்த' மாயையை உருவாக்கினார்.

அகதிகள் விவகாரத்தில் இனவாதத்தைத் தூண்டி, விமர்சிப்பவர்களைத் தேசத்துரோகிகளாக முத்திரை குத்தினார். 'ஹங்கேரியின் ஆன்மா நானே' என்ற பிம்பத்தை அவர் கட்டமைத்தார்.

ஆனால், இத்தகைய உணர்ச்சிவசப்படும் கோசங்கள் மக்களின் உண்மையான வாழ்வாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கவில்லை. ஆளும் வர்க்கத்தினர் செல்வாக்கு பெற்று வளரும்போது, சாதாரண மக்களின் ஊதியங்கள் முடங்கியதும், சுகாதாரச் சேவைகள் சீர்குலைந்ததும் யதார்த்தத்தை உணர வைத்தன.

உலக அரங்கில் விக்டர் ஓர்பான் ஒரு குழப்பவாதியாகவே பார்க்கப்பட்டார். உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பின்போது புட்டீனுக்கு ஆதரவாக நின்றமை, உக்ரைனுக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவிகளைத் தடுத்தமை என்று அவரது நடவடிக்கைகள் அனைத்தும் நாட்டின் நலனை விட, அவரது தனிப்பட்ட நலன்களையும் சர்வதேச கூட்டாளிகளையும் திருப்திப்படுத்துவதாகவே அமைந்தன.

ஒரு தலைவர் தனது நாட்டின் அல்லது பிராந்தியத்தின் நலன்களைப் பொருட்படுத்தாமல் செயற்படும்போது, அவர் உள்நாட்டிலேயே தனது தார்மீக ஆதரவை இழக்க நேரிடும் என்பதற்கு ஓர்பான் ஒரு நேரடி உதாரணமாகிறார்.

ஓர்பான் தொடர்ந்து வெற்றி பெற்றதற்குக் காரணம் அவரது செல்வாக்கு மட்டுமல்ல, அவருக்கு எதிரான வாக்குகள் பல சிறு கட்சிகளிடையே சிதறிக் கிடந்ததுதான்.

இதற்கு முன் நடந்த தேர்தல்களில், 60 சதவீத மக்கள் அவருக்கு எதிராக இருந்தபோதிலும், அந்த வாக்குகள் லிபரல், சோஷலிச மற்றும் பசுமைக் கட்சிகளிடையே பிரிந்து சென்றதால் ஓர்பான் எளிதாக வென்றார். ஆனால், பீற்றர் மக்யார் செய்த மிகப்பெரிய சாதனை, இந்தச் சிதறிய வாக்குகளை ஒருங்கிணைத்ததுதான்.

ஓர்பானின் வீழ்ச்சி ஒரு ஜனநாயகத் தோல்வி என்றால், வரலாற்றில் பல சர்வாதிகாரிகள் மிகக் கொடூரமான முடிவுகளைச் சந்தித்துள்ளனர். அதிகாரம் ஒரு புள்ளியில் குவியும்போது, அது வீழ்ச்சியடையும் வேகமும் அதிகமாகவே இருக்கும்.

இத்தாலியின் பெனிட்டோ முசோலினி தீவிர தேசியவாதத்தைப் பேசிய அவர், இரண்டாம் உலகப் போரின் இறுதியில் தனது சொந்த மக்களாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது உடல் மிலான் நகரின் வீதியில் தலைகீழாகத் தொங்கவிடப்பட்டது.

பிலிப்பைன்ஸின் பெர்டினாண்ட் மார்க்கோஸ் ஊழல் மற்றும் அதிகாரக் குவிப்பின் உச்சத்தில் இருந்த இவர், 'மக்கள் சக்தி புரட்சி' மூலம் நாட்டை விட்டு விரட்டியடிக்கப்பட்டார். பல பில்லியன் டொலர் ஊழல் புகார்கள் இன்றும் அவரது குடும்பத்தின் பெயரில் உள்ளன.

லிபியாவின் முஅம்மர் கடாபி 40 ஆண்டுகால இரும்புப்பிடி ஆட்சியை நடத்திய நிலையில் 2011 அரபு வசந்தப் புரட்சியின் போது ஒரு சாக்கடைக் குழாய்க்குள் ஒளிந்திருந்த நிலையில் பிடிபட்டு, கிளர்ச்சியாளர்களால் கொல்லப்பட்டார்.

இலங்கையில் நடைபெற்ற 'அரகலய' போராட்டம் ஒரு குடும்பம் நாட்டின் அதிகாரத்தையும் பொருளாதாரத்தையும் முழுமையாகக் கட்டுப்படுத்த முனைந்தபோது, மக்கள் வீதிக்கு இறங்கிப் போராடி, அந்த ஆட்சியாளர்களை நாட்டை விட்டு ஓடச் செய்தது.

அந்த வகையில் ஓர்பான் விட்டுச் சென்ற சிதைந்த நீதித்துறையும், அரசியல் மயப்படுத்தப்பட்ட பொலிஸ் படையும் ஒரு இரவில் மாறிவிடாது.

எதேச்சாதிகாரிகள் தாங்கள் நிரந்தரமாக நீடிக்க வேண்டும் என்ற நோக்கில் உருவாக்கிய கட்டமைப்புகள் மாற்றப்படுவதற்கு நீண்ட காலம் எடுக்கும்.

ஆனால், இத்தகைய 'ஓர்பான் மொடல்' இனி வெற்றி பெறாது என்பது ஹங்கேரியில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

தற்போதைக்கு அதுவே மக்கள் ஜனநாயக எழுச்சிக்கானதும், எதேச்சதிகாரத்தின் வீழ்ச்சிக்குமான ஆகப்பிந்தைய உதாரணமாக்கக் காணப்படுகின்றது. இது ஒட்டுமொத்த உலக நாடுகளின் தலைவர்களுக்கும் சிந்த வொரு படிப்பினையாகும்.




நமது ஈழநாடு வாழ்வாதார உதவிக்கர திட்டத்தில் இம்முறை மட்டக்களப்பு மாவட்டத்தின் கதிரவெளி மற்றும் பனிச்சங்கேணி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட உதவி தேவைப்படும் குடும்பங்களிற்கு உதவித்திட்டங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

மனித உரிமைகள் செயற்பாட்டாளர் கீத் குலசேகரத்தின் ஏற்பாட்டில் வாழ்வாதார உதவித்திட்டம் தேவைப்படும் தேர்தெடுக்கபட்ட மாவீரர் மற்றும் முன்னாள் போராளிகள் குடும்பங்களிற்கு வழங்கப்படும் இந்த வாழ்வாதர உதவித்திட்டத்தில் இம்முறை செயற்பாட்டாளர்களான நிரஞ்சன் பாலசிங்கம், முகமது முக்ரின் முஸ்தாக் காம்டா மற்றும் அஸீம் அஹமது அலாவுதின் ஆகியோரின்  நிதிப்பங்களிப்பில் மேற்படி கிராமத்தை சேர்ந்த  குடும்பங்களுக்கும் அத்தியவசிய உணவுப்பொருட்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டது.

